மதுரை போன்ற பற்றுக் குறைப் பகுதிகளில் அரிசி தாராளமாகக் கிடைக்கின்றது. எனவே, தற்போது குடும்பக் கார்டுமூலம் வழங்கப்படும் அரிசியின் அளவை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை.

DR. H. V. HANDE : Sir, from the explanation given by the Hon. Minister it is obvious that, even though the quantity has been reduced, there has not been any practical difficulty because rice is coming in the open market. Is it a fact that a few persons including two municipal councillors undertook a fast on this issue?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தது உண்மை. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதைக் கேட்டால் அவர்களே சொல்வார்கள். அரசாங்கத்தின் கையிருப்பு நிலைமையை உத்தேசித்து 800 கிராமாகக் குறைக்க வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்த மட்டில் நிலைமை செம்மையாகவும் சீராகவும் இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று நாம் அதற்கு ஒரு நோக்கம் கற்பித்துக் கிளர்ச்சி எதுவும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) தமிழ்நாடு உயர்நீதிமன்றக் கட்டிடங்களில் வழக்குரைஞர்களுக்கு அளிக்கப்பட்ட அறைகளிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தங்குவதற்கு அறைகளின்றி அவர்களுடைய அல்லலும்.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Sir, under rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the plight of Advocates of the Tamil Nadu High Court for want of chambers in view of their eviction from the High Court Buildings.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I wish to make the following statement :—

The High Court has furnished the following information :—

For some time past, it has been found difficult to have proper accommodation for the offices of the High Court in view of the large number of institution of cases and large volume of records being produced into court. Provision had to be made for keeping in safe custody the records received in connection with election cases, namely, ballot papers, etc. Consequent on the increase in the number of Judges, additional court halls had to be provided for the Judges and the Master and additional chambers for the Judges had also to be provided. This resulted in resumption of chambers which had been allotted to Law Officers of the Government. As a result, the Law Officers of the Government had to be provided with alternative accommodation. The Law Officers also had been requesting for additional accommodation for their officers. There was also increase in the

number of Law Officers and accommodation had to provided for then too. Hence the chamber accommodation provided in the main High Court building, which had been temporarily allotted to senior Advocates, had to be resumed. With a view to provide alternative accommodation to Senior Advocates who had been given accommodation in the main High Court building, some law chambers in the Advocates block had to be resumed from some advocates.

The High Court has provided alternative accommodation as far as possible and it is also considering proposals for the construction of Law chambers.

6. அரசினர் மசோதாக்கள். மு.ப. 11–00

(அ) 1969-ம் ஆண்டு, சிவில் நடைமுறை சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) மசோதா.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I move—

that leave be granted to introduce the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சிக்கல்கள்குறித்து திரு. கணபதியாப் பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கையின் விவாதம்—தொடர்ச்சி.

திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு மாத காலத்தில் நல்லதொரு பிரச்சினையைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து, தெளிவான விளக்கத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிற திரு. கணபதியா பிள்ளை கமிஷனை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினையில் ஒரு கமிஷனை நியமித்து அதன் வாயிலாக உண்மைகளைப் பெறவேண்டுமென்ற ஒரு முடிவினை எடுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசினைப் பாராட்டுகிறேன். அரசின் நடவடிக்கையைக் கண்டு நான் மகிழ்கிறேன். இந்தக் கமிஷனுடைய அறிக்கையைப்பற்றி, இந்தக் கமிஷனுடைய நியமனம்பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், கூட்டணியில் இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி இழுத்த இழுப்பிற்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் செல்வதாகக் குற்றச்சாட்டுகள் சொல்லப் பட்டன. ஆனால் யாருடைய கட்டாயத்திற்காகவோ அல்லது